முருகப்பெருமான் துணை

**மகான் கணநாத நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**11.02.2023**, சனிக்கிழமை

1. ஞானகுருவே அரங்கா வாழ்க
   ஞானமருளும் தேசிகா வாழ்க
   ஞானதேசிகன் உன் திருவடியை
   ஞானத்திருவடியாக ஏற்றுவர
2. வருகவே உலகோர் தேறுவரென
   வாழ்த்தியே அனுகூல ஆசிதனை
   பெருமைபட சுபகிருது கலை திங்கள்
   புகலுவேன் எழுநான்குதிகதி காரிவாரம்
   (சுபகிருது வருடம் தை மாதம் 28 ம் நாள் 11.02.2023, சனிக்கிழமை)
3. வாரமதில் கணநாதர் யானும்
   வழங்குவேன் உலகநலம் பெற
   சோரமிலா நல்லுலகம் அமைய
   சுத்த சன்மார்க்க நெறிவழி
4. நெறிவழி மக்கள் வர வேணும்
   நெஞ்சமெல்லாம் முழு சரணாகதி
   அறிவுத் தெளிவு காணும்படி
   அனைவரும் அரங்கன் ஆசி பெற்று
5. பெற்றுமே தயவு எனும் சக்தி
   பிரணவக் குடிலில் நிரம்பியிருக்க
   ஆற்றல் பெற தொடர்ந்து வந்து
   அரங்கன் தருமத்தில் உதவி
6. உதவி சேவை ஆற்றி வர
   உண்மை விளங்கும் படி
   ஆதரவு தந்து அரங்கனின்
   அவதார சூட்சுமம் பலமறிந்து
7. அறிந்துமே தொண்டர்களாகி
   அகலா அனைவரும் தொடர
   தெரியவரும் மாற்றம் பல
   தேசமெங்கும் ஞானவான்கள் நிரம்ப
8. நிரம்பவே சன்மார்க்க வழி
   நீதிநெறி வழியாகத் தேறி
   வரம்பிலா கலியின் அநீதிகள்
   வதைகண்டு விலகும் வண்ணம்
9. வண்ணமுடன் ஞானவான்கள் படை
   வலம்வர ஞான ஆட்சியாக
   மண்ணுலகை காக்க வல்ல
   மனத்தூய்மை நிறைந்த ஆளுமையாக

10. ஆகவே நிலைகள் மாறி
ஆற்றல் பெருகி உலகினில்
யுகமே ஞானயுகம் ஆகும்
உயர்வான மக்கள் சமூகமாகி

11. ஆகியே ஆறுமுகப் பெருமானை
அனுதினமும் வணங்கித் தேறி
அகிலத்தை மாற்றும் சக்திகளாவர்
அறிவித்த அனுகூல ஆசிமுற்றே

—சுபம்—